செய்தி வெளியீடு எண்: 657 நாள்:12.09.2020

# செய்தி வெளியீடு

மாநில வளர்ச்சிக் கொள்கை குழுவில், மாநில சமச்சீர் வளர்ச்சி திட்டத்தின் 14–வது மாநில அளவிலான அதிகாரக்குழுவின் கூட்டம் 08.09.2020 அன்று மாண்புமிகு துணைத்தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சிக்கான திட்டங்கள் மற்றும் கருத்துக்கள் பரிசீலனை செய்யப்பட்டு ரூ.10.65 கோடிக்கு இறுதி செய்யபட்டன. மஞ்சள் பயிரிடும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் சில விவாதிக்கப்பட்டன. அப்போது மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள், முன்பு எவ்வாறு மரவள்ளி பயிரின் சந்தை வாய்ப்புக்களை நிறுவனப்படுத்தி இடைத்தரகர்களின் பிடியில் இருந்து சாகோ சர்வ் போன்ற கூட்டுறவு அமைப்பின் மூலம் அன்றைய புரட்சித் தலைவர் ஆட்சியில் செயல்படுத்தப்பட்டதோ அதே வழியில் மஞ்சள் விற்பனையில் விவசாயிகளை இடைத்தரகர்களின் பிடியில் இருந்து மீட்க ஒரு கூட்டமைப்பை நிறுவுவதன் அவசியம் குறித்து எடுத்துக் கூறினார். மாநில வளர்ச்சிக் கொள்கை குழுவின் உறுப்பினர் செயலர் திரு.அனில் மேஷ்ராம், இ.ஆ.ப., அவர்கள் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு சந்தை வாய்ப்புகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். எனவே மஞ்சள் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகள் குறித்து தோட்டக்கலை துறை, வேளாண் விற்பனைத் துறை மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகம் ஆகியவை ஒன்றிணைந்து மாநில வளர்ச்சிக் கொள்கை குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி வலியுறுத்தினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**